# தமிழீழத் தேசியக் கொடி

தேசிய சுதந்திரத்தை வேண்டிநிற்கும் ஒரு மக்கள் சமுதாயத்திற்கு ஒரு தேசியக்கொடி இன்றியமையாதது. தேசிய தனித்துவத்தையும், ஒருமைப்பாட்டையும், இறைமையையும் ஒரு தேசியக்கொடி சித்தரித்துக்காட்டுகிறது. தேசாபிமானத்தின் சின்னமாகவும் அது திகழ்கிறது. அரசியல் சுதந்திரத்தின் ஆணிவேரான குறியீடாகவும் தேசியக்கொடி அமைகிறது.

தேசிய விடுதலையை இலட்சியமாகக்கொண்டு போராடி வரும் தமிழீழ மக்களுக்கு ஒரு தேசியக்கொடி உண்டு. சென்ற ஆண்டு இரண்டாவது மாவீரர் நாளன்று (27.11.1990) புலிக்கொடி தமிழீழத்தின் தேசியக்கொடியாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது.

எமது தேசியக் கொடியை சித்தரித்துநிற்கும் புலிச்சின்னம் எப்படித் தோற்றம் கொண்டது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? அந்தக் குறியீட்டின் அர்த்த பரிமாணங்கள் என்ன? என்பதை பிரகடனப்படுத்துகின்றோம்.

சரியாகப் 19 ஆண்டுகளுக்கு முன்னர், 1972ம் ஆண்டு எமது தேசியத் தலைவர் பிரபாகரன் தமிழீழ சுதந்திர இயக்கத்திற்கு அத்திவாரமிட்டார். அன்று அவர் ஆரம்பித்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்திற்கு தமிழ்ப் புதிய புலிகள் எனப் பெயரிட்டார். பின்னர் 1976ம் ஆண்டில் தமிழ்ப்புதிய புலிகள் என்ற எமது அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் எனத் தலைவரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து தமிழீழ தேசத்தின் தனித்துவத்தையும், தமிழீழ விடுதலை இலட்சியத்தையும் சித்தரிக்கும் சின்னமாக புலிச்சின்னம் விளங்கியது.

புலிச் சின்னத்தை தமிழீழத்தின் தேசிய சின்னமாக பிரபாகரன் தேர்ந்தெடுத்ததற்கு காரணமுண்டு. புலிச்சின்னம் திராவிடர் நாகரீகத்தில் வேரூன்றி நிற்கும் ஒரு படிமம். தமிழரின் வீர வரலாற்றையும், தேசிய எழுச்சியையும் சித்தரித்துக்காட்டும் குறியீடு. வலிமையையும், தன்னம்பிக்கையையும் குறித்துக்காட்டும் சின்னம். அன்று வீரவரலாறு படைத்த சோழ மன்னர்களும் புலிக்கொடியின் கீழ் தமிழனை எழுச்சிகொள்ளச் செய்தனர். தமிழுணர்வை, இன உணர்வை, தேசியப்பற்றுணர்வை, பகைவனுக்கு அஞ்சாத வீரவுணர்வை, பிரதிபலிக்கும் ஆழமான, அற்புதமான குறியீடாகத்திகழ்கிறது புலிச் சின்னம்.

ஐந்நூறு ஆண்டுகாலத்திற்கு மேலாக அந்நியர்களாலும். அயல் நாட்டுச் சிங்களவர்களாலும் அடிமைப்பட்டுக் கிடந்த ஈழத் தமிழினத்தை ஆயுதப் போராட்டப் பாதையில் வழி நடாத்த முன் வந்த எமது தலைவன் அன்று புலியை தேசிய விடுதலை இயக்கச் சின்னமாகத் தேர்ந்தெடுத்தது மிகவும் மதிநுட்பம் வாய்ந்த ஒரு முடிவு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு.

புலிச்சின்னம் தேசிய சின்னமாக மக்களின் உணர்வுகளில் ஆழமாகப் பதிந்தது. செத்துப் போய்க் கிடந்த தமிழ்த் தேசிய ஆன்மா புத்துயிர் பெற்றது. இன்று எமது தேசியக் கொடியாகிய புலிக்கொடியின் கீழ் தமிழீழ தேசிய இனம் ஒன்றுபட்டு நிற்கிறது. எழுச்சி கொண்டு நிற்கிறது.

எமது தலைவர் பிரபாகரன் தாம் உருவாக்கிய விடுதலை இயக்கத்திற்கு புலிகள் என்ற பெயரை தேர்ந்தெடுத்ததற்கு இன்னுமொரு காரணமும் உண்டு.

நீண்ட கால அடிமைத்தனத்தில் ஊறிப்போன ஒரு சிறிய தேசிய இனம் ஒரு பெரிய தேசிய இனத்தின் நவீனமான, பலம் மிக்க ஆயுதப் படைகளை எதிர்த்துப் போராடுவது எப்படி? இராணுவ பலம் மிக்க ஒரு அரசுக்கு எதிராக ஆயுதப்போராட்டத்தை வெற்றிப்பாதையில் முன்னெடுத்துச் செல்வதாயின் சிறப்பான, விசேடமான போர்க் குணங்களைக் கொண்ட ஒரு விடுதலைப் படை உருவாக்கப்பட வேண்டும். அபாரமான துணிவும், சாவுக்கும் அஞ்சாத வீரமும், விடுதலை வேட்கையும் கொண்ட வீரர்களை உருவாக்க வேண்டும். மனித வேங்கைகளை உருவாக்க வேண்டும். புலிபோல வேகத்துடனும், மூர்க்கத்துடனும் போராடும் தலைசிறந்த வீரர்களை உருவாக்க வேண்டும். இந்த நோக்கில் தான் புலிப்படையை கட்டி எழுப்பினார் பிரபாகரன். பிரபாகரனின் புலிப்படை இன்று உலகின் தலைசிறந்த விடுதலை இராணுவமாக போற்றப்படுகிறது.

இன்று எமது தேசியக் கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் புலிச் சின்னத்தின் உருவப் படம் பிரபாகரனின் கருத்திற்கு அமையவே



வரையப்பட்டது. பிரபாகரனின் நண்பரும் மதுரையைச் சேர்ந்த பிரபல ஓவியருமான நடராஜன் என்பவர் 1977ம் ஆண்டு புலிச் சின்னத்தின் உருவப்படத்தை வரைந்தார். பிரபாகரனின் யோசனைக்கு அமைய பல தடவைகள் வரைந்து, இறுதியில் எமது தலைவரின் எண்ணப்படம் புலிச்சின்னமாக உருவகம் பெற்றது. இந்தப் புலிச் சின்னம் இன்று எமது தேசியக்கொடியை அலங்கரிக்கிறது. சுதந்திரத் தமிழீழத்தின் தேசியக் கொடியாகவும் ஒரு நாள் உயர்த்தப்படவிருக்கும் இக்கொடியில் சித்தரிக்கப்பட்டுள்ள குறியீடுகளின் அர்த்தங்களை இனிப்பார்ப்போம்.

எமது தேசியக் கொடியை மூன்று நிறங்கள் அலங்கரிக்கின்றன. மஞ்சள், சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள்.

தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை. தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுயநிர்ணய) உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து, தன்னாட்சி உரிமையை நிலை நாட்டுவதற்காக தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது, மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது.

தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்து விட்டாற்போல நாம் முழுமையாக விடுதலைபெற்றதாகக் கொள்ள முடியாது. தமிழீழ சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். வர்க்க, சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும். பெண் அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டுவரவேண்டும். சமத்துவமும், சம தர்மமும், சமூக நீதியும் நிலை நாட்டப்படவேண்டும். இப்படியான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி எமது அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது.

விடுதலைப்பாதை கரடுமுரடானது. சாவும் அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக் கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும். அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். என்றும் தளராத உறுதி வேண்டும். கறுப்பு நிறம் மக்களின் மன உறுதியை குறித்துக் காட்டுகிறது.

தேசியக் கொடியின் மையத்தில் புலிச் சின்னம் அமையப்பெற்றிருக்கிறது. ஆவேசத்துடன் பாயும் புலியை குறிப்பதாக புலியின் தலையும், முன்னங்கால்களும் சித்தரிக்கப்பட்டுள்ளது. புலிச் சின்னத்தின் அர்த்தம் பற்றி மேலே விளக்கியிருந்தோம். தமிழ்த் தேசாபிமான எழுச்சியை மட்டுமன்றி வலிமையையும், வீராவேசத்தையும் புலிச் சின்னம் குறித்து நிற்கிறது. பாயும் புலியை ஒத்த எமது வீரவிடுதலைப்போரையும் அது சித்தரிக்கிறது. புலித் தலையை சுற்றி வட்டமாக ரவைகளும், இரு புறத்திலும் கத்திமுனையுடைய துப்பாக்கிகளும் எமது ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்தை குறியீடு செய்கின்றன.

ஒட்டு மொத்தத்தில், எமது தேசியக்கொடி, சுதந்திரத்தையும் சமதர்மத்தையும் வேண்டி நாம் நடாத்தும் வீரவிடுதலைப் போரை அற்புதமாகச் சித்தரிக்கிறது. தமிழரின் வீர மரபில் வேரூன்றி நின்று பிறப்பிக்கப்போகும் தமிழீழத் தனியரசின் குறியீட்டு வடிவமாகவும் எமது தேசியக்கொடி திகழ்கிறது.

## முத்தமிழ் விழா

எதிர்வரும் சித்திரைத் திங்கள் 6-ம் நாளில் இருந்து 15-ம் நாள்வரை தமிழீழக் கலைஞர்கள் அனைவரையும் ஒன்று திரட்டிய ஒரு முத்தமிழ் விழாவை நடாத்த நாம் முடிவு செய்துள்ளோம். இவ் விழாவில் தமிழீழத்தின் பலநூறு கலைஞர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் கலந்துகொள்ளும் அரங்குகள் இடம்பெறுகின்றன.

இயல், இசை, நாடகமாகிய முத்தமிழையும் உள்ளடக்கிய 9 நாட்கள் இவ்விழா நடைபெறும்.

இறுதி நாளான 10-ம் நாள் எமது இயக்கம் அறிமுகப்படுத்தும் ''தமிழீழத் தேசிய விருது'' இந்த மண்ணுக்கு அளப்பரிய சேவையாற்றிய பல துறைகளையும் சார்ந்த 10 மாமனிதர்களுக்கு வழங்கப்படும்.

கவியரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள், வாத்திய இசைகள், நடனம், நாட்டிய நாடகம், பாரம்பரிய கருத்துக்கள், நவீன நாடகங்கள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும் இந்த முத்தமிழ் விழாவை விடுதலைப் புலிகள் கலை கலாச்சாரப் பிரிவு ஒழுங்குசெய்து நடாத்துகின்றது.

இங்கு இடம்பெறும் நிகழ்வுகள் எமது விடுதலைப் போராட்டத்தை மக்களுக்குத் தெளிவுபட விளக்குவதாகவும் எமது தேசியத்தை எடுத்தியம்புவதாகவும் இருக்கும்.

இந்த விழாவை ஒட்டி மிகப்பெரிய விழாச்சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.